# அனைத்துலகச் சைவ மாநாடு - 2016

**"சிவாகமங்களும் திருமுறைகளும் புலப்படுத்தும் சைவப் பண்பாட்டுக் கூறுகளும் சமூக நல்லிணக்கச் சிந்தனைகளும்"**

# ஆய்வடங்கல்

## ISC
## 2016

பெப்ரவரி - 12,13,14 - 2016
இந்துநாகரிகத்துறை,
கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

# முதலாவது அனைத்துலகச் சைவ மாநாடு - 2016

ISSN No : 2478 - 0634

**பதிப்பாசிரியர் குழு**

**பிரதம பதிப்பாசிரியர்**

பேராசிரியர் கலாநிதி மா. வேதநாதன்

**பதிப்பாசிரியர்கள்**

திரு. ப. கணேசலிங்கம்

கலாநிதி (திருமதி) சுகந்தினி சிறீமுரளிதரன்

கலாநிதி (திருமதி) விக்னேஸ்வரி பவனேசன்

திரு. ச. முகுந்தன்

திரு. ச. பத்மநாபன்

திரு. பொ. சந்திரசேகரம்

திரு. சி. ரமணராஜா

திரு. தி. செல்வமனோகரன்

திரு. க. கந்தவேள்

**பொறுப்புக்கூறல்**

இவ்வாய்வடங்கலில் இடம்பெற்றுள்ள ஆய்வுக்கட்டுரைகளின் அனைத்துக் கருத்துக்களுக்கும் குறித்த கட்டுரைகளின் ஆசிரியர்களே முழுப்பொறுப்பாளிகள் ஆவர்.

# சிவாகம விதிமுறைகளும் திருக்கோயில் நிர்வாகமும்

அ. சாந்தினி

**ஆய்வுச் சுருக்கம்**

திருக்கோயில்கள் ஊடான வழிபாட்டுமுறைகள் நீண்டகாலமாக இந்துக்களின் வாழ்வியலோடு நெருக்கமாகப் பின்னிப் பிணைந்து வந்துள்ளன. கோயில்கள் வெறுமனே ஒரு வழிபாட்டுமையம் என்பதற்கு மேலாகப் பல்வேறுநிலைகளிலும் இந்துக்களின்வாழ்வை வழிப்படுத்தியிருந்ததை எமது சமயவரலாற்றின் மூலமாக அவதானிக்க முடிகிறது. திருக்கோயில்களின் அமைப்புமுறைகள், அவற்றுள் பிரதிஷ்டை செய்யப்படும் விக்கிரகங்கள், அவற்றை மையப்படுத்தி மேற்கொள்ளப்படும் பூசைகள் போன்றவற்றின் விதிமுறைகளைக் கூறும் இலக்கியங்களாக சிவாகமங்கள் சிறப்புப்பெறுகின்றன. இவையுணர்த்தும் தத்துவவிளக்கங்களும் குறிப்பிடத்தக்கனவாகும். திருக்கோயில் நிர்வாகம் பற்றி நேரடியான குறிப்புக்கள் இல்லாவிட்டாலும் சிவாகமங்கள் முன்வைக்கும் விதிமுறைகள் கிரமமாகப் பின்பற்றப்படுமாயின் அது செம்மையான திருக்கோயில் வழிபாட்டுக்கு ஆதாரமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. குறிப்பாக பூசைமுறைமையையும் மனிதவளத்தையும் எவ்வாறு நிர்வாகம் செய்யலாம் என ஆய்வுசெய்வது இந்துசமூகத்திற்குப் பயனுள்ளதாக அமையும். இன்றைய காலத்தில் உலகமயமாக்கம், பின்நவீனத்துவம் என்பன பற்றிய கருத்தாடல்களும் அபரிமிதமான தொழில்நுட்பவளர்ச்சியும் உலகத்தொடர்பாடல் சூழலைச் சுருக்கியுள்ளநிலையில் சமயரீதியான பெறுமதிகள் பலசெல்வாக்கிழந்து வருகின்றன. குறிப்பாக இக்காலகட்டத்தில் இந்துக்கள் திருக்கோயிலுடனான உறவுகளை நெகிழவிடுன்றனர். கோயில்நிர்வாகத்திலும் முரண்பாடானநிலையைக் காணமுடிகிறது. மரபுரீதியாகப் பின்பற்றப்பட்டுவரும் சிவாகமவிதிமுறையின் பின்னணியினூடாக திருக்கோயில் நிர்வாகத்தை ஒழுங்கமைப்பது பற்றியதாக இவ்வாய்வு அமைகிறது.

திருக்கோயில்களில் சிவாகமவிதிகளை கிரமமானமுறையில் கடைப்பிடிப்பதனூடாக செம்மையான நிர்வாகத்தை ஏற்படுத்துதலும், சிவாகமங்களின் முக்கியத்துவத்தை விளங்கிக் கொள்ளுதலும் இவ்வாய்வில் முன்னிலைப்படுத்தப்படுகின்றன. திருக்கோயில்கள் புனிதமாகப் பேணப்படவேண்டியன. இதனைக் கோயிலுக்குள் பணிபுரிவோரும், வழிபடுவோரும் உணர்ந்து கொள்ளுதல் அவசியமானதாகும். அத்துடன் இன்றையகாலத்தில் இளவயதினர் உட்படப் பலரும் கோயில்வழிபாட்டின் முக்கியத்துவத்தினை அறிவதன் மூலம் சமய சமூகவிழுமியங்களை பின்பற்ற நேரிடுகின்றது. செம்மையான நிர்வாகத்தின் வாயிலாக மக்களுக்கும் கோயிலுக்கும் இடையேயான உறவை வளர்தெடுத்தல், அடுத்த இந்துஇளம்சமூகத்திற்கு எமது திருக்கோயிற் பாரம்பரியத்தின் சிறப்பினை விளங்கவைத்தல் போன்றவை இவ்வாய்வின் நோக்கங்களாகும்.

மேற்படி ஆய்வினை மேற்கொள்வதற்குச் சிவாகமங்கள் குறிப்பாக பூசை மற்றும் கிரியைமுறைகள் பற்றிக்கூறும் சிவாகமங்கள் முதன்மையான மூலாதாரங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. அத்துடன் திருக்கேயில்களின் முகாமைத்துவம் பற்றிய நூல்கள், கட்டுரைகள் வெளிவராதநிலையில் களஆய்வு, நேரடிஅவதானம், நேர்காணல் போன்றனவும் முதலாம்தரச் சான்றுகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. மேலும் இவ்வாய்வில் விபரணஆய்வு, ஒப்பீட்டாய்வுமுதலிய ஆய்வு அணுகுமுறைகள் பின்பற்றப்படுவதும் குறிப்பிடத்தக்கது. இந்துசமயத்தவர்களை தமதுசமயத்தில் நம்பிக்கைவைத்து அதனது பாரம்பரியத்தை நிலைநிறுத்துவதற்குத் தூண்டுதல் அளிக்கமுடியும். அத்துடன் செம்மையான நிர்வாகமானது வழிபடுவோருக்கும் ஆலயத்துக்கும் இடையிலான ஒருவகையான பிணைப்பை ஏற்படுத்தத் துணையாகும். மேலும் இளம்சமுதாயத்தினர் சிவாகமங்கள் கூறும் விடயங்கள், திருக்கோயில்களின் முக்கியத்துவம் என்பன பற்றியசில செய்திகளையாவது அறிந்துகொள்ளுதல் போன்ற சில விடயங்களை வெளிப்படுத்த இவ்வாய்வு முனைகிறது.

**திறவுச்சொற்கள் :** கோயில், நிர்வாகம், சிவாகமம், இந்துசமூகம், பூசை

சிரேஷ்ட விரிவுரையாளர், வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம். mathushanthini@yahoo.com

**அறிமுகம்**

**கோயில்களும் சிவாகமங்களும்**

இந்துசமூகத்தின் பல்வேறுபட்ட அம்சங்களின் கலப்புநிறுவனமாகக் கோயில்கள் விளங்குகின்றன. இச்சமூகத்தின் வாழ்வையும் அதன் பெருமை, தனித்துவம், ஒற்றுமை என்பவற்றையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றகளமாகவும் இவை அமைகின்றன. இந்துசமயத்தின் வரலாற்றில் திருக்கோயில்கள் பல்வகைப்பட்ட தன்மைகளையும் பரிணாமவளர்ச்சிகளையும் பலபெறுமதிகளையும் கொண்டு தனித்துவமான பாரம்பரியத்துடன் நிலைத்திருப்பதைக் காணலாம். இத்தகைய சிறப்புக்குச் சிவாகமங்கள் அடித்தளமாக இருந்துள்ளன எனக்கூறலாம். மேலும் இந்துசமயப் பண்பாடும், நாகரிகமும் திருக்கோயில்களையே மையப்படுத்தி வளர்ந்து வந்துள்ளதைச் சான்றுகள் புலப்படுத்துகின்றன. இந்துசமயத்திற்குச் சிறப்பு நூல்களாக விளங்கும் சிவாகமங்களே கோயிலமைப்பு, திருவுருவங்களின் உருவாக்கம், வழிபாட்டுமுறைகள் பற்றிய விதிமுறைகளை முன்வைத்தன. இவற்றையே ஆகமம்சார்கோயில்கள் மரபுரீதியாகப் பின்பற்றி வருகின்றன. மேலும் கோயில்களின் அமைப்பு, கோயிலமைப்புக்குத் தேவைப்படும்பொருட்கள், கோயிற்கோபுரங்கள், பிரகாரங்கள், பரிவாரதெய்வங்கள், தூண்கள், மண்டபங்கள், அவற்றின் விமானங்கள், கொடிமரம், மற்றும் ஓவியங்கள், சிற்பங்கள், உபகரணங்கள், வாகனங்கள், இசைக்க கருவிகள், கோயிலிற் பணிபுரிவோர் எனப்பல விடயங்கள் கோயிலோடு தொடர்புபடுத்தப்படுவதைக் காணலாம்[1]. எல்லாவற்றிற்கும் மேலாக தனிமனித மேம்பாட்டிற்கும் சமுதாயம், கிராமம், நாடு என்பவற்றின் உன்னதநிலைக்கும் எவையெவை அவசியமோ அவையனைத்தையும் சிவாகமங்கள் மிகவிரிவாகக் கூறுகின்றன[2]. இவ்வகையில் கோயில்கள் பரந்துபட்ட பொறுப்புக்களுடன் விளக்கம்பெறுவதால் அவற்றின் நிர்வாகம் மிகவும் முக்கியமான இடத்தைப் பெறுகின்றனவெனில் மிகையில்லை.

பல்வேறு பொறுப்புக்களை மேற்கொள்ள வேண்டிய கோயில்கள் செம்மையான நிர்வாகக் கட்டமைப்பினை உருவாக்கி, அதன் வாயிலாக திருக்கோயில்களின் தோற்றத்திற்கான தாற்பரியத்தை நிலைநிறுத்த வேண்டியனவாகின்றன. ஆனால் பெரும்பாலனவற்றில் நிர்வாகக் குறைபாடுகளும் சிவாகமத்திற்கு முரண்பாடான செயற்பாடுகளும் காணப்படுகின்றன. ஒருசில கோயில்கள் சில ஆகமவிதிகளை மீறினாலும் பூசை முதலானவற்றில் விதிகளை ஒழுங்கு முறையில் மேற்கொண்டு வழிபடுவோரை ஈர்ப்பனவாக உள்ளனவென்பதும் கவனத்தில் கொள்ளப் படவேண்டியதாகும்.

**கோயிலும் வழிபாடும்**

கோயிலில் காணப்படும் விக்கிரகங்களின் உருவமைப்பு, அவற்றிக்கு மேற்கொள்ளப்படும் அலங்காரங்கள். ஈடுபாட்டுடன் செய்யப் படும் மந்திரங்கள், பூசைகள் போன்றன கோயிலுக்குள் நுழையும் ஒருவரை ஆன்மீகத்திற்கு இட்டுச்செல்கின்றன. மேலுமிவை ஒருவரின் புறஈடுபாட்டைத் தளரச்செய்து, அகவெழுச்சியை ஏற்படுத்த வல்லன. குறிப்பாகச் சடங்குகள் கோயில்வழிபாட்டில் ஆதிக்கமுடையவையாகும். இவ்வாறான கிரியைகள், சடங்குகள் பற்றிச்சிறப்பாக ஆகமங்கள் குறிப்பிடுகின்றன. 'அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பேறுகளில் வீடாகிய பேறுதான் ஆன்மாவின் குறிக்கோளாக இருக்கவேண்டும். அதனை எய்தும்வழி பூசனையாம்' என்பது காரணாகமத்தின் நித்தியார்ச்சனாவிதிக்குப் பொருள்விளக்கம் ஆகும்[3]. மேலும் "புண்ணியமானதும் நன்மையளிப்பதும்

பாபத்தைஅழிப்பதும் மகாபாதகங்களை நீக்கவல்லதும் எல்லாவகை வேள்விகளின் பயன்களையும் அளிப்பதே நித்தியாச்சனம்" எனக் பூர்வகாரணாகமம் கூறும்[4]. சிறப்பாப திருக்கோயில் வழிபாட்டுமரபே கிரியையென அழைக்கப்படுகிறது[6].

**சோழர்கால கோயில்களின் எழுச்சி**

திருக்கோயில்களிற் பெரும்பாலனவை அமைப்பியல்ரீதியாகவும் கிரியைகள் ரீதியாகவும் பரந்துபட்டுக் காணப்படுவதால் அதற்கேற்றவகையில் நிர்வாகக்கட்டமைப்பும் பரந்தவகையில் அமைவது அவசியமாகும். முன்னையகாலங்களில் அரசர்கள், அரசநிர்வாகிகள், சமூகம் எனப் பலதரப்பட்டவர்களும் கோயில் நிர்வாகத்தோடு தொடர்புபட்டிருந்தமையால் நிர்வாகமானது இலகுதன்மையைக் கொண்டிருந்தது. சமூகபாரம்பரியம் கோயில் நிர்வாகத்தில் முக்கியஇடத்தினைப் பெற்றிருந்தமையைச் சான்றுகள் எடுத்துக்காட்டுகின்றன. கோயில்களும் கோயிற்பணிகளும் சோழர்காலத்தில் மிகவும் உன்னதவளர்ச்சி பெற்றிருந்ததோடு, நிர்வாக ஒழுங்குகளும் செம்மையாக மேற்கொள்ளப்பட்டு சமூகத்துடன் நெருக்கமான உறவை வளர்த்திருந்தமையை பின்வரும் கூற்றிலிருந்து அறியலாம்,

"கோயிலை உருவாக்குதோடு மட்டும் அவர் களுடைய (சோழர்கள்) நடவடிக்கைகள் முற்றுப்பெறவில்லை. கோயில்களில் பருவகாலவிழாக்களும் (ளநயளழையெட றழசளாணி) தேவையான ஒவ்வொன்றையும் உருவாக்கியிருந்தனர். பரார்த்த பூசைகளை மேற்கொள்தற்காக சிவாச்சாரியரையும் நைவேத்யத்தைத் தயாரிப்பதற்காக சமையலாளையும் நந்தவனங்களையும். நிய மித்தனர். தமிழ்மக்களுடைய சமயவாழ்வில் மிகச் சிறந்தபொற்காலமாகச் சோழர்காலம் விளங்கியது.... அடிக்கடி நடைபெற்ற திருவிழாக்கள் அவர்களுடைய நாளாந்த வாழ்வில் இறைவனுடைய முன்னிலையில் நிற்பதற்கு மிகவும் துணையாகியது."[7] எல்லாநிலையிலும் கோயிலை வளர்த்த சோழமன்னர்கள் திருவிழாக்கள் வாயிலாக மக்களுக்கும் கோயிலுக்கும் இடையிலான நெருக்கமான உறவை வளர்த்தெடுத்திருந்ததைக் காணலாம். இன்றையகாலகட்டத்தில் இந்நிலை முற்றாக மாற்றமடைந்துள்ளமையை அவதானிக்கலாம். நிர்வாகத்தில் குறைபாடுகளும், பூசைகளைக்கிரமமாக நடத்தாத போக்குகளும், மக்களுக்கும் கோயிலுக்கும் இடையிலான பிணைப்பு அருகியும் காணப்படுவது கவலைக்குரியதாகும்.

**கோயில்களும் நிர்வாகக் கட்டமைப்பும்**

இன்றைய ஆகமம்சார்கோயில்களின் நிர்வாகக்கட்டமைப்பினைப் பின்வருமாறு படிமுறையிற் கூறலாம்.[8]

1. அறங்காவலர் (தர்மகர்த்தா) -
   அறங் காவலர் குழு (பரிபாலன சபை)
2. முகாமையாளர்
3. நிர்வாகசபை
   1. திருப்பணிச்சபை
   2. தொண்டர் சபை.
   3. வழிபடுவோர் சபை
4. அர்ச்சகர் - அர்ச்சகர்கள்
5. பணியாளர் - பணியாளர்கள்

அனைத்து ஆகமம்சார்கோயில்களிலும் இவ்வாறான நிர்வாகக்கட்டமைப்பு உள்ளதெனக் கூறமுடியாது. ஆனால் இவ்வாறான நிர்வாகக்கட்டமைப்பு ஒரு கோயிலில் காணப்படும்போது அங்கு ஆகம விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவது எளிதாக அமைவதோடு, ஆகமநெறிமுறையின் நற்பயன்களைத் தனிமனிதனும் அக்கோயில் சார்ந்த சமூகமும் பெற்றுக்கொள்ளுமெனலாம்.

"குரு லிங்க பத்தியுள்ளவர்களும் ஆகம உணர்ச்சியுள்ளவர்களுமாகிய பெரியோர்களே ஆலய தர்மகர்த்தாக்களாய் இருத்தல் வேண்டும்.

அவர்களே ஆலயத்தை விதிப்படி நடத்திச் சமயத்தை வளர்ப்பார்கள். அவர்கள் அங்கே நடைபெறும் கிரிகைகளையும் முறைகளையும் முறைப்படி செய்யாவிடின் அதனால் வருங்கேட்டையும் அறிந்து பழிபாவங்களுக்கு பயந்து வேதாகம அறிவும் நல்லொழக்கமும் ஈசுரபத்தியும் உள்ள சிவாச்சாரியர்களை நியமித்து கிரியைகளைச் செய்விப்பார்கள்".[9]

மேற்படி கருத்தின்பிரகாரம் நோக்கின் கோயிலுக்குப் பொறுப்பாக உள்ளவர்கள் எவ்வாறிருத்தல் வேண்டும் எனக் கூறப்படுவதை அவதானிக்கலாம். இதன் பின்னணியிலேயே தர்மம் என்பது கோயிலதிகாரிகளுக்கு வழங்கப்படும் சிறப்புப்பெயராக வந்துள்ளதெனலாம். இவ்வாறே கோயிற்பணியாற்றும் மற்றோரும் தம் கடமையையும் பொறுப்பையும் உணர்ந்து செய்தல் இந்துசமூகத்திற்குப் பெருநன்மையளிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

**கோயிற் பூசைகளின் பயன்கள்**

பூசைகளே கோயிலைஇயங்கவைக்கும் அடிப்படை அம்சமாகிறது. இவை பரார்த்த பூசை என்னும் பிரிவுக்குள் உள்ளடக் கப்படுகின்றன. இங்கு செய்யப்படும் பூசை எல்லாசீவராசிகளும் நலமடையும் பொருட்டு மேற்கொள்ளப்படுகின்றன[10] கோயில்களில் நித்திய, நைமித்திய, காமிக பூசைகள் நடைபெறுவது வழக்கமாகும். இவற்றை அடிப்படையாகக் கொண்டு கோயிலின் முகாமைத்துவம் மேற்கொள்ளப்படுதல் அவசியமாகும். அதாவது கோயில்களில் பூசைகள் நடத்தப்படுதலே பிரதானமாகையால் அதனை எவ்விதகுறைகளுமின்றி நடத்து வித்தல் கோயில் நிர்வாகத்தின் முதன்மையான பொறுப்பாகும். சிவாகமங்கள் ஒவ்வொரு பூசையையும்எவ்வாறு மேற்கொள்ளவேண்டும், எத்தகைய அர்ச்சகர் அதனை நடத்துவதற்குத் தகுதியானவர்? அவர் மேற்கொள்ள வேண்டிய பணிகள் எவை? பூசைக்குத் தேவையான பொருட்கள் எவை? உபகரணங்கள் யாவை? என்பன பற்றிய விபரங்களைத் தருகிறன. தகுதியான அர்ச்சகரைத் தேர்வதுடன், அவர் சிறந்த வகையில் பூசைகள் மேற்கொள்வற்கும் கோயில்நிர்வாகம் ஒழுங்குகள் மேற்கொள்வதன் வாயிலாக செம்மையாக சிவாகமம் கூறும் பூசாவிதிகளை நடைமுறைப்படுத்தமுடியும்.

பூசை என்றால் என்ன? அதன்பயன் யாது என்பது குறித்துப் பின்வருமாறு விளக்கமளிக் கப்படுகிறது.

"எல்லாக்கர்மாக்களையும் நிறைவுறும்படி செய்வதாலும் உபாசகனுக்கு ஒத்த ஞானத்தைக் கொடுப்பதாலும் பூஜை எனப்பெயர் பெற்றது.புண்ணியமானதும் நன்மையளிப்பதும் பாவத்தையழிப்பதும் மாபாதகங்களை நீக்கவல்லதும் எல்லாவகை வேள்விகளின் பயன்களை அளிப்பதே நித்தி யார்ச்சனம்"[11] .

எனவே தினமும் செய்யப்படும்பூசை (நித்தியார்ச்சனை) இந்துசமயிகளின் ஆன்மீக நோக்கத்திற்கு அடித்தளமாகின்றது எனக் குறிப்பிடலாம்.

**பூசையில் செய்யப்பட வேண்டியவை**

ஆவாஹனம், ஸ்தாபனம், பாத்தியம், ஆசமனம், அர்க்கியம், அபிஷேகம் திருவுற்றாடை, வஸ்திரம், சந்தனம், புஷ் பார்ச்சனை, தூபதீபங்கள், நைவேத்தியம், பலியிடுதல், நித்தியாக்கினிகார்யம், பாட்டு வாத்யம், நாட்டியம், பூசை முடிந்ததென விண்ணப்பித்தல் போன்ற பலவித செயற்பாடுகள் பூசையின்போது மேற் கொள்ளப்படவேண்டும்.[12] ஆகமவிதிப்படி அமைந்த ஆலயம் ஒன்றில் ஆறுகாலப் பூசைகள் நடைபெற வேண்டுமாகையால் அவை யெல்லாவற்றிலும் மேற்படி செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுமாயின் அர்ச்சகர் மிகுந்த சிரமத்திற்குள்ளாக நேரிடும். இவ்வளவு

பணிகளையும் மேற்கொள்வதற்காகத் தேவையான பொருட்களைச் சேகரித்தல், அவற்றைப் பேணுதல், பூசைக்குரியவகையில் ஒழுங்குபடுத்துதல், பயன்படுத்துதல் என்பவற்றுடன் பூசைசெய்யப் பயன்படுத் தப்படும் பல்வேறுபட்ட பாத்திரங்கள், விளக்குகள், தூபதீபங்கள் முதலியவற்றை சுத்தம்செய்தல், விக்கிரகத்தை பல் வகைத்திரவியங்கள் கொண்டு நீராட்டுதல், பூசைக்கேற்றவகையில் நைவேத்தியம் தயாரித்தல், அதனைத் தயாரிப்பதற்குரிய மடப்பள்ளியை ஒழுங்குபடுத்துதல் போன்றன கோயிலில் நடைபெறவேண்டியுள்ளன. இவற்றை ஒழுங்குமுறையிற் செய்வதற்கு சிறந்த நிர்வாகமுறைமை ஏற்படுத்தப்படுவது அவசியமாகும்.

**சிவாகமவிதிகளும் பலாபலன்களும்**

சிவாகமங்கள் கூறும்விதிளை திருக் கோயில்களில் நடைமுறைப்படுத்தும் வேளை யில் அதற்குரிய பொருட்கள் குறைவுபடாமல் இருப்பதை நிர்வாகம் உறுதிசெய்வது அவசிய மாகும்.

"பூசைஇல்லாவிடில்ரோகமும், புகூஷ்பமில்லையாயின் குலநாசமும், பூசைக்குச் சந்தனமின்றி செய்தால் குகூஷ்டரோகமும், ஜலமில்லாவிடில் துக்கமும், தூபமில்லா விட்டால் சுகத்தின் நாசமும், தீபமில்லையாயின் செல்வக்குறைவும், நைவேத்தியமில்லாவிட்டால் பஞ்சமும், மந்திரம் இல்லாவிடில் தரித்திரமும், வஸ்திரமில்லாவிடில் மகாரோகமும், ஓமம் இல்லையெனின் குலபயமும், பலியில்லாது விட்டால் கிராமநாசமும், நெய்யில்லாவிட்டால் மரணமும், வில்வம் அறுகு அஷ்தையில்லாவிடில்சத்ருபயமும், மணியில்லாவிடில் செவிட்டுத்தன்னையும், முத்திரையில்லாவிட்டால் அசுரபயமும், நித்தியாக்கினியில்லாவிடில் பூசைக்கு நிகூஷ்பலமும், நித்தியோத்ஸவம் இல்லாவிடில் அரசர் இராச்சியம் போன்றவைக்குப் பயமும், சர்வதிரவியம் இல்லையெனின் தேவதைகளுக்குக்கோபமும் உண்டாகும். எல்லாத் திரவியங்களும் இல்லாவிடில் அளவுகடந்த தீங்குமுண்டாகும். ஆதலால் சர்வமுயற்சியாலும் பூசையைப் பக்தியோடு நன்றாய்ச் செய்க"[13]

இத்தகைய குறைபாடுகள் இன்றிப் பூசைசெய்வதால் தனிமனிதன் மட்டுமன்றிச் சமூகமும் சிறப்பாகக் கிராமமும் நலமாக வாழும் என்பது ஆகமம் தரும்செய்தி. சில நற்பலன்கள் பற்றியும் அவை நேரடியாகவே குறிப்பிடுகின்றன. தூபதீபம் நிவேதனம் சௌபாக்கியத்தையும், பலியீறாகச் செய்யப் படுபவை அமைதியையும், நிருத்தம் முடியும்வரையானது அபிவிருத்தியையும் வழங்குமென்பது சிவாகமங்ககளால் அறியத் தக்கதாகும். அவ்வகையில் தீபாந்தம், நிவேத்யாந்தம், பல்யந்தமானபூசைகள் சாந்தி யைத்தரும். ஓமந்தபூசை விஜயத்தையும் உற்சவாந்தபூசை சாந்தியையும், தோத்தரந்த பூசை புகூஷ்டியையும் மத்யமபூசை புகூஷ்டி மற்றும் விருத்தியையும் தரும்.[14] எனவே ஆகமங் களில் விதிக்கப்பட்ட பூசைமுறைகளை வகுக்கப்பட்டவாறுகடைப்பிடித்து நற்பேற்றினை நாட்டுக்கும் மக்களுக்கும் பெற்றுக்கொடுத்தல் கோயில்நிர்வாக்தின் கடனாகும். பூசைகள் முறையாக நடைபெறா விடின் விளையும் தீமைகளை திருமூலர் பின்வரும் பாடலினூடாக விளக்குகின்றார்.

"முன்னவனார் கோயில் பூசைகள் முட்டின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளல்குன்றும்
கன்னல் களவு மிகுந்திடுதல் காசினி
என்னருந் நந்தி எடுத்துரைத்தானே"

எனவே சிவாகமஅடிப்படை திருக்கோயில் களுக்கு முக்கிமானவை என்பதும் அதன் அடிப்படையில் மானசீகமாகச் செய்யப்படும் பூசை உரியநன்மையை அளிக்கும் என்பதும் தெளிவாகிறது. இது செம்மையான நிர் வாகத்தின் மூலமே சாத்தியமாகும்.

**அர்ச்சகரும் அவரது பணிகளும்**

பூசைக்காக ஆயத்தங்களை முன்னெடுக்கும் பணிகளில் பெரும்பாலனவற்றை அர்ச்சகரே செய்வதை அவதானிக்க முடிகிறது. கோயிலில் பூசைகளை ஒழுங்காக மேற் கொள்ளும் பொறுப்புடையவராகிய அவர் மடப்பள்ளியில் நைவேத்தியம் தயாரிப்பது, பூசைப்பாத்திங்களை சுத்தம் செய்வது, பூசைக்கு உபயகார்களைத் தேடிச்சென்று அதற்குரிய பணத்தை பெறுவது எனத் தானே மேற்கொள்வதையும் தற்காலத்தில் காண்கிறோம். சிவாகமங்களில் பரிசாரகர் என்பவர் பிரதான அர்ச்சகரோடு கோயிற்பணிகளில் உதவுபவராக கூறப்படு கிறார். சிறப்பாக நைவேத்தியம் செய்யும் பொருட்டு பாசகர் எனப்படும் பரிசாரகர் நியமிக்கப்படுவார். 'இவர் சிவதீக்ஷசை பெற்றவராக இருக்கவேண்டும். தினமும் நீராடித்தோய்த்துலர்ந்த ஆடையணிந்து நித்தியகடன்களை முடித்துத் தர்ப்பை தரித்தவராக மடைப்பள்ளியிற் புகுந்து...' பணியாற்றவேண்டும்.[15] இவ்வாறு கோயிற் பணிகளில் அர்ச்சகருக்குப் பல்வேறு உதவிகளைச்செய்யும் பரிசாரகர்களையும் தேவையான பிறபணியாளர்களையும் சிவாகமம் கூறும்விதிப்படி கோயில்நிர்வாகம் நியமித்தால் பூசகர் தன்பணிகளைச் சிறப் பாகச் செய்வதோடு, கோயிற் கிரிகைளும் செம்மையாக நடைபெறும்.

ஒரு கோயிலில் 12 வேளைகள் பூசைகள் செய்யப்படுவதை சிவாகமம் விதந்துரைக் கின்றது. 8 வேளைகள் பூசைகள் செய்வது பெருநன்மை விளையும் என்பதை உத்த மோதத்தமம் என்றும், 7 காலம் செய்வது உத்தம மத்திமம் எனவும், 6 காலம் செய்வது உத்தமம் எனவும், 5 காலம் மத்திமோத்தமம், 4 காலம் மத்யமோத்தமம் என்றும் 3 காலம் மத்யமாதமம் எனவும் வேளைகளை அதாவது காலத்தை அடிப்படையாகக்கொண்டு கூறப் படுவதைக் காணலாம்.[16] இருப்பினும் எமது திருக்கோயில்களில் ஒரு காலப்பூசைகூட நடைபெறாத கோயில்களும் உள்ளன. சிலகோயில்களில் மூன்றுவேளை அல்லது இருவேளைப் பூசைகளே நடைபெறு கின்றன. இதற்குப் பெரும்பாலும் நிர்வாகப் பிரச்சனைகளும் பிரதான காரணமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. நிர்வாகத்திற்குப் பொறுப்பாகவுள்ளவர்கள் சிவாகம அறிவுள்ள சிவாசாரியர்களின் துணையுடன் 6 காலப்பூசைகளாவது நடைபெறுவதற்கு உதவவேண்டும்.

பூசைகளை நாழிகைகளை அடிப் படையாகக் கொண்டதாக சிவாக மங்கள் வரையறை செய்கின்றன. உதாரண மாக 'உஷக்காலப்பூசை சூரியன் உதிக்கமுன் மூன்றேமுக்கால் நாழிகைக்கு முன் செய்தல் வேண்டும். காலைச்சந்திப்பூசை சூரியன் உதித்தபின் ஏழரைநாழிகைக்கு முன் செய்தல் வேண்டும். இதனைத்தொடர்ந்து உச்சிக் காலப்பூசை...'[17] எனவே அர்ச்சகர் குறித்த நாழிகையில் பூசைமேற்கொள்ளல் அவசியமாகும். இதன்பொருட்டே அக்காலத்தில் கோயிலுக்கருகில் அக்கிரகாரங்கள் அமைக்கப்பட்டன. பல்லவர் காலத்திலிருந்தே பிராமணர் குடியிருப்புக்கள் தோற்றம் பெற்றிருந்தபோதும் சோழர் காலத்தில் அவை விரிவுபடுத்தப்பட்ட தன்மைமையையும் இப்பிராமணர்களின் நிர்வாகசபைகள் கோயிற்காரியத்தைக் கவனிப்பதில் கொண்டிருந்தபங்கினையும் அக்காலச்சான்றுகள் அறியத்தருகின்றன.[18] அக்காலத்தில் கோயிலை மையப்படுத்தியே பிராமணர் வாழ்ந்தனர். ஆனால் இக்காலத்தில் பூசைசெய்யும் சிவாச்சாரியர்கள் பல்வேறு காரணங்களினால் தூரஇடங்களில் இருந்து வந்து பூசைசெய்வதால் சிவாகமம் கூறும் நேரப்பிமாணத்தைக்கடைப்பிடிக்கத்தவறுவதைக் காணலாம். இந்து சமயக்கோயில்கள் பலவற்றில் குறித்த நேரம் பூசைகள் நடைபெறாமை பெருங் குறைபாடாகும். நேரந்தவறாமையின்

அவசியத்தைச் சிவாகமங்களின் பின்னணியில் விளங்கிக்கொண்டு உரியநேரத்தில் பூசைகள் நடைபெற கோயில்நிர்வாகம் உதவுமாயின் அதுசார்ந்த ஊர் நன்மைபெறுமெனலாம்.

**கோயிலும் பிறபணியாளர்களும்**

சிவாகமம் கூறும் விதிகளை நடை முறைப் படுத்துவதற்குப் பணியாளர்கள் முன்னர் குறிப்பிட்ட வாறு கோயிலுக்குள்ளே தேவைப்படுவதைப் போன்று கோயிலுக்கு வெளியேயும் தேவைப்படுகின்றனர். இதன் பின்னணியியே அக்காலத்தவர்கள் குலஒழுங்கின் பிரகாரம் கோயில் பணிகளைச் செம்மை யுற நடாத்தினர். குளக்கோட்டு மன்னன் இவ்வொழுங்கின் பிரகாரம் திருக் கோணேச்சரத்து ஆலயப்பணிகளை செம்மையுற நிறைவேற்றியதை கோணேசர கல்வெட்டு எடுத்துக்காட்டும். ஆனால் இன்றைய காலத்தில் கோயிற்பணிகளைச் செய்வதற்கு மட்டுமன்றி வழிபாடாற்றவும் ஆட்களைத் தேடவேண்டியுள்ளது. இம்மனித வளக்குறைபாட்டின் பின்னணியிலும், பொரு ளாதாரநெருக்கடிகளின் பின்னணியிலும் கோயில்கள் இயந்திரமயமாவதைக் காண லாம். மின்சார மேளமடிக்கும் கருவி, ஒலிப் பதிவுத் தேவாரங்கள், சாமி இழுக்கும் சில்லுவண்டிகள் எனக் கோயிலின் பணிகளில் மனிதவளப்பற்றாக்குறை நிலவு வதைக் காண்கிறோம். சோழர் காலம் போல கோயில்களை மையப்படுத்தி, வேலைவாய்ப்புகளை வழங்குவதற்கு முகாமைத்துவம் துணையாதல் வேண்டும். இதன் பின்னணியில் சிவாகமவிதிமுறைகளை நடைமுறைப்படுத்த வேண்டும்: இந்துக்களைக் கோயிலை நோக்கி வரச்செய்தல் வேண்டும்.

**கோயிலும் நந்தவன அமைப்பும்**

சிவாகமங்கள் குறிப்பாகக் காரணாகமம் பூசையில் பயன்படுத்தும் பூக்கள் எவை யெவையென வரைறை செய்துள்ளதைக் காணலாம். காலை, நண்பகல், மாலை ஆகியவேளைகளில் வேளைக்குப் 10 வகையான பூக்களைக் குறிப்பிட்டுள்ளது. காலையில் தாமரைப்பூ, பொரசம்பூ, துளசி, நவமல்லிகை, நந்தியாவட்டை, மந்தாரை, முல்லை, சண்பகம், புன்னாகம், தாழை போன்றவற்றாலும், நண்பகலில்வெண்தாமரை, அரளி, பெரசு, துளசி, நெய்தல், வில்வம், சங்கபுக்ஷ்பம், மருதாணி, கோவிதாரம், ஓரிதழ் போன்றவற்றாலும் மாலையில் செந்தாமரை, அல்லி, மல்லி கை, ஜாதி, முல்லை, மருக்கொழுந்து, வெட்டிவேர், கஜகர்ணிகை, துளசி, வில்வம் போன்றவற்றாலும் பூசிக்க வேண்டுமெனக் கூறப்படுகின்றது.[19] ஆகமம் விதிக்கும் பூக்களில் பலஇன்று கோயிற்பூசைகளில் பயன்படுத்தப்படாததோடு, இங்கு சொல்லப் படாத பூக்களும் பயன்படுத்துவதைக் காண முடிகிறது. சிவாகமவிதிகளை கடைப்பிடிக்க விரும்பும் கோயில்கள் அதில் கூறப்பட்டுள்ள புக்ஷ்பங்களைச் சிரமமில்லாது பெறுவதற்கு கோயிலுடன்நந்தவனத்தையும்தகுந்தமுறையில் பேணிப்பாதுகாத்தலை கோயில்நிர்வாகம் மேற்கொள்ளுமாயின் அதனாற் கிடைக்கும் பயனைப் பெற்றுக்கொள்ளலாம்.

அதுமட்டுமன்றி பயன்படுத்தக்கூடாத பூக்கள்பற்றியும், அவற்றை எவ்வாறுபறிக்கலாம் என்பதுபற்றியும் கூறுவதைநோக்கின் அதற்கு தனியானநிபுணத்துவம் தேவையென்பது புலனாகின்றது. முன்னையகாலங்களில் பூக்களை தகுந்தமுறையிற்பறித்து பல்வகைப் பட்ட மாலைகளாகவும், பூக்களாகவும் செய்வதற்கு பண்டாரம் எனக்குறிப்பிடப்பட்ட குழுவினர் பொறுப்பாக இருந்தனர். ஆனால் இன்று அர்ச்சகர், வழிபடுவோர் முதலானோரே பூசைக்குப் பலவகைப்பட்ட பூக்களைவழங்குவதைப் பெரும்பாலான கோயில்களில் அவதானிக்கமுடிகிறது.

**கோயில்களும் திருப்பணிகளும்**

திருக்கோயிலானது தன்னகத்தே பலவேறுகட்டமைப்பினை உள்ளடக்கிய ஒரு ஆன்மிகக்கட்டிடமாகும். தென்னிந்தியாவைப் பொறுத்தவரை பல்லவர் காலந்தொடங்கி திராவிடக்கட்டடக் கலைப்பாணியின் பல்வேறு வளர்ச்சிநிலைகளைப் பெற்றுச் சிறந்தகருவூலமாகக் விளங்கிவருகின்றன. கருவறை தொடங்கி கோபுரம்வரைப்பல கட்டிடக்கூறுகள் அதில் இடம்பெறுவதோடு, சிற்பம், வார்ப்புக்கலை, ஓவியம், இசை, நடனம் போன்ற கலைகளின் மையமாகவும் திருக்கோயில்கள் பொலிவுற்றிருந்தன. இலங்கையைப் பொறுத்தவரை தென்னிந்தியக்கலைஞர்களை அவ்வப்போது வரவழைத்துக் கலைவேலைப்பாடுகளையும் கருங்கற்பணிகளையும் மேற்கொள்வதைக் காணலாம். கோயிலைச்சிறந்த வகையிலும் மக்களை ஆன்மீகத்தின் பால் ஈர்க்கும் வகையிலும் இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஆயினும் இச்செயற்பாடுகள் கோயிலுக்கு வருமானம் இல்லாத நிலையில் மேற்கொள்ளப்படுவதையும், இதற்கு நீண்ட காலத்தை எடுத்துக்கொள்வதையும்காணலாம். இதனால் பூசைகள் தடைப்பட்டு நடைபெறாத நிலை ஏற்படுவது குறிப்பிடத்தக்கது. மானிப்பாய் மருதடிகோயிலில் மேற்கொள்ளப்பட்ட கருங்கற் பணிகளினால் நிதிப்பற்றாக்குறையை எதிர்நோக்கியதோடு ஏறக்குறையப் பத்துவருடங்கள் திருவிழாக்கள் நடைபெறவில்லை. பூசைகளற்ற கோயில்களால் தீமைகளே ஏற்படும் என்பதைச் சிவாகமங்கள் கூறுவதை மேலே கண்டோம்.

கும்பாபிடேகம் குறிப்பிட்ட காலத்தில் செய்யவேண்டியது அவசியம் என்பதை சிவாகமம் வலியுறுத்துகிறது. ஆனால் அக்காலத்தில் தான் எல்லாவேலைகளையும் கோயில் முகாமைத்துவம் மேற்கொள்வதைக் காணலாம். உதாரணமாக திருத்த வேலைகள், வர்ணம் பூசுதல் கோயிலையும் சுற்றுப்புறத்தையும் துப்பரவு செய்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். திருத்த வேலைகளை ஒன்றாகச்செய்வதால் கும்பாபிடேகச்செலவு, விழாச்செலவு என்பன அதிகமாக அது உபயககாரர் மற்றும் வழிபடுவோரைப் பாதிக்கிறது. அவ்வப்போது வருமானத்திற்கேற்றவாறு திருத்தவேலைககளைச் செய்தல் அவசியமாகும். மேலும் இந்துக்கோயில்களில் நித்திய, நைமித்திய, காமியக் கிரிகைகள் முக்கியமானவையாகும். இவை முறையே தினந்தோறும் நடைபெறுபவற்றையும், காரணம் பற்றியும், பெறுபேற்றினை அடிப்படையாகக்கொண்டும்நடைபெறுவன. விரிவுபடுத்தப்பட்ட பூசைகளை இவை உள்ளடக்குகின்றன. இப்பூசைகள் யாவும் சிவாகம விதிமுறைகளுக்கமைய குறைவுபடாமல் நடத்தல் வேண்டும். ஆனால் வருமானம் போதாமல் இருத்தல், பல்வேறு சேவைகள் ஒன்றில்ஒன்று தங்கியிருத்தல் போன்றவற்றினால் பூசைகள் முழுமையின்றியும், காலதாமதம் ஏற்படுதலும் தவிர்க்க முடியாததாகின்றது. குறிப்பாக நாழிகை அடிப்படையில் பூசைகள் மேற்கொள்ளாமையால் வழிபடுவோர் குறித்தநேரத்தில் தமது வழிபாட்டினை மேற்கொள்ள முடியாமை பொதுவாக இந்துக்கோயில்களிலுள்ள குறைபாடாகும். எனவே இத்தகைய குறைபாடுகளை நீக்குவது கோயில் நிர்வாகத்தின் கடமையாகும்.

**நிறைவுரை**

இந்துசமயத்தின் பொக்கிசமான சிவாகமங்கள் இந்துக்கோயில் வழிபாட்டின் கருவூலங்களாகும். தெய்வத்திருவருளால் வழங்கப்பட்டதாகக் கருதப்படும் இவை இந்துக்கோயில்கள் அமைக்கும் முறைமை, பூசை முறைமை போன்ற பலவிடயங்கள்

பற்றிக் கூறுகின்றன. ஒரு இந்துக்கோயிலை ஒரு மனிதனின் உடலுக்கு நிகராக எடுத்துக்காட்டுவர். எவ்வாறு எமது உடலை நாம் பேணுகின்றோமோ அவ்வாறே கோயில்களையும் பேணுதல் அவசியமாகும். மேலும் கோயில் வழிபாடென்பது ஆன்மீகத்துடன்மட்டும்சம்பந்தப்பட்டதன்று. விஞ்ஞானத்தோடும் உளவியலோடும் தொடர்புடையதென ஆய்வாளர் வியந்து நிற்பர். இத்தகைய சிறப்புடைய கோயில்களில் சிவாகமவிதிகளை கோயில் நிர்வாகம், சிவாகமம் வல்ல சிவாச்சாரியர்கள் வாயிலாக நடைமுறைப்படுத்த முன்வர வேண்டும். பூசைகளைஆகமமுரண்பாடுகளுடன் செய்யும்போது தீமைகளே விளையும். ஆகமவிதிகளை நடைமுறைப்படுத்தும் போது நற்பலன்களை அளிப்பதாக அமையும். கோயில் முகாமைத்துவத்தில் கட்டுப்பாடு, ஒழுங்கமைப்பு, ஒருங்கிணைப்பு, திட்டமிடல் என்பவற்றின் அடிப்படையில் மனிதவளம், பௌதிகவளம், நிதிவளம், தகவல்பேணல், நேரமுகாமைத்துவம் போன்றவற்றை நடைமுறைப்படுத்தவேண்டும். இத்தகைய நிலையில் சிவாகம விதிகளை இலகுவாக நடைமுறைப்படுத்தமுடியும் எனலாம்.

**அடிக்குறிப்புகள்**

1. கைலாசநாதக்குருக்கள்,கா., *(2009)*, **சைவத்திருக்கோவிற் கிரிகைநெறி,** கிருஷ்ணானந்த சர்மா.ஸ்ரீ. (பதிப்பாசிரியர், **கா. கைலாசநாதக்குருக்கள் ஞாபகார்த்தசபை,** யாழ்ப்பாணம், ப.9.
2. கமலநாதக்குருக்கள், இரகு.,*(11.08.2005)* **ஆலயக்கிரிகை மரபில் ஸ்பர்சாகுதி,** சிவஸ்ரீ ஸ்ரீனிவாசக இரகுநாதக்குருக்கள் ஸ்ரீமதிநாதரூபி தம்பதிகளின் க்ஷக்ஷடியப்த பூர்த்திவிழா வெளியீடு, ப.*13.*
3. ராஜலிங்கக் குருக்கள். ஆர்., **நித்தியார்ச்சனாவிதி (காரணாகமம்),** தமிழ்நாடு, ப.2.
4. சுப்பிரமணியன்.ஆர்., **பரார்த்தபூசை** (Janaki,S.S., ed),(1988), siva temple and temple rituals, The Kuppuswamisastri Research Institute, madras,p.64.
5. பத்மநாதன்.ச.,*(2015)*, **சிவாகம மரபில் நைவேத்தியம்.** நியந்திரீ வெளியீடு, யாழ்ப்பாணம், ப.02
6. Janaki.s.s., (1988), **siva temple and temple rituals,** The Kuppuswamisastri Research Institute, madras, p. xxiv
7. மகேஸ்வரன் வல்லிபுரம், *(2008)* **சோழர்காலத்துக் கோயிலும்சமூகமும்,** குமரன் புத்தகஇல்லம், கொழும்பு – சென்னை, பக்.*190-192.*
8. பல்வேறு கோயில்களின் நிர்வாகத்துடன் மேற்கொண்ட நேரடிஉரையாடலின்போது கிடைத்த தகவல்களின் அடிப்படையில் ஒழுங்கமைக்கப்பட்டது.
9. ராஜலிங்கக் குருக்கள். ஆர்., மு.கு.நூ., ப. *09.*
10. கமலநாதக்குருக்கள், இரகு.,*(2005)* மு.கு.நூ., ப. *22.*
11. ராஜலிங்கக் குருக்கள். ஆர்., மு.கு.நூ., பக். *225, 226*
12. சுவாமிநாதசிவாச்சாரியார், எஸ்., (தொ.ஆ.), *(1951)*, **நித்தியபூஜா லக்ஷணஸங்கிரகம்,** ஸ்ரீலஸ்ரீ ஆனந்த பரவச தேசிக சுவாமிகள் குருபூஜை விழா மலர், தர்மபுர ஆதீனம். பக். *83 - 84.*
13. ராஜலிங்கக் குருக்கள். ஆர்., மு.கு.நூ., பக். *219, 220*
14. கைலாசநாதக்குருக்கள்,கா., *(2009)*, மு.கு.நூ., ப. *148.*
15. சுவாமிநாதசிவாச்சாரியார், எஸ்., (தொ.ஆ.), *(1951)*, மு.கு.நூ., பக். *12, 13.*
16. கைலாசநாதக்குருக்கள்,கா., *(2009)*, மு.கு.நூ., பக். *126 - 129.*
17. மகேஸ்வரன் வல்லிபுரம், *(2008)*, மு.கு.நூ., பக். *192 - 196.*
18. சுவாமிநாதசிவாச்சாரியார், எஸ்., (தொ.ஆ.), *(1951)*, மு.கு.நூ., பக். *94 - 96.*
19. மேலது, பக். *98 - 100.*